## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 7/2020 Date:21.01.2026.**

**(PW1)- பிரான்சிஸ் என்ற மரிய பிரான்சிஸ்**

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பாகப்பிரிவினைப்படி எனக்கு கிடைத்த சொத்தின் தெற்கு பக்கம் சூசை மிக்கேலின் சொத்து அதற்கு தெற்கு பக்கம் பெஞ்சமின் சொத்து என்றால் சரியல்ல, எனது சொத்திற்கு தெற்கு பக்கம் சூசை மிக்கேலின் சொத்து உள்ளது. பொதுவாக ஒரு சொத்தை பரிமாற்றம் செய்யும் போது எழுத்து பூர்வமாக ஆவணம் ஏற்படுத்த வேண்டும் என்பது சட்டம் என்றால் சரிதான். எனது அண்ணன் தபசில் சொத்தை உரிமை மாற்றம் செய்வதாக கூறுவதை எழுத்து பூர்வமாக ஆவணமாக ஏற்படுத்தவில்லையென்றால் சரிதான்.

2. அவ்வாறு பத்திரம் ஏற்படுத்தினால் அதில் தேதி முதலிய விவரங்கள் தெரியும் என்பதால் ஆவணங்கள் ஏற்படுத்தி பதிவு செய்யவில்லையென்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வாசாஆ. 10 வில்லங்க சான்றிதழில் 1990ம் வருடத்தில் ஏற்பட்ட முதல் பதிவில் பட்டிகை சொத்தின் சர்வே எண் 888/15 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வீட்டின் கதவு எண் என்ன என்றால் 166 D ஆகும். நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தை பார்வையிடும் போது நான் உடனிருந்தேனா என்றால் இருந்தேன். நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நான் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லையென்றாலும் எந்த ஆட்சேபணையும் இல்லையென்றாலும் சரியல்ல.

3. பட்டிகை சொத்தில் எனது அண்ணன் சூசை மிக்கேலின் கதவு எண் 6/116 D கொண்ட வீடு உள்ளது என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை தான் தாக்கல் செய்துள்ளேனே தவிர மேற்படி புகாரின் அடிப்படையில் நடைபெற்ற விசாரணையை தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. விசாரணை அறிக்கை ஏதும் தாக்கல் செய்யவில்லையென்றாலும் அவ்வாறு தாக்கல் செய்தால் நான் நிலத்தை அபகரிக்க முற்பட்டது தெரிந்து விடும் என்றால் சரியல்ல. இதுநாள்வரை தபசில் சொத்திற்கான வரி ரசீது என் பெயரில் இல்லையென்றால் சரியல்ல. மேற்படி வரி

ரசீதையோ, பட்டாவையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

4. பட்டிகை சொத்து சூசை மிக்கேலிற்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவரது இறப்பிற்கு பின்பு அவரது வாரிசுகளான 3, 4 பிரதிவாதிகள் பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. 2010 ம் ஆண்டில் ஏற்பட்ட உட்பிரிவின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற சர்வே எண்ணை கொண்டு ஏற்படுத்திய 12.10.1982 தேதியிட்ட ஆவணம் செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வாசாஆ. 5 ஆவணம் செல்லாத நிலையில் 1ம் பிரதிவாதியை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**5**ம் பிரதிவாதி குறுக்கு விசாரணைக்காக **30.01.2026** தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது**.**